# உள்ளான மனிதன் புதிதாக்கப்படுவதாக...

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த மனிதனொருவன், பல கஷ்டங்கள், துன்பங்கள்,பாடுகள்மத்தியிலே தனக்கு கொடுக்கப்பட்ட சேவையை செய்து வந்தான். அந்த மனிதனைப்போல சேவை செய்து வருபவர்களில் சிலர், அந்த மனிதனுக்கு உண்டான துன்பங்கள், அவனாலேயே உண்டாயிற்று என்று அவனைக் கைவிட்டுவிட்டார்கள். அந்த நிலையிலே, நீங்களோ மனமிரங்கி, அந்த மனிதனுக்கு உதவி செய்து தீர்மானித்து உதவிகளை அனுப்பி வைத்தீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்த மனிதனானவன், அந்த உதவியை ஏற்றுக் கொண்டு, உங்களுடைய உதாரத்துவ குணத்தை கண்டு சந்தோஷப்பட்டான். நீங்கள் செய்த உபகாரத்தைக் குறித்து அவர்களை பாராட்டி கடிதம் ஒன்றை எழுதியிருக்கின்றார். அந்தக் கடிதத்திலே, உங்கள் உதாரத்துவ குணம் மிகவும் பராட்டத்தக்கது, ஆனாலும், நீங்கள் இன்னென்ன காரியத்திலே முன்னேற வேண்டும். சில சுபாவங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று தயவாக கூறியிருந்தால், நீங்கள் என்ன கூறுவீர்கள்? அவனுடைய மனக்கடினத்தையும், அகங்காரத்தையும் பார் என்று கூறுவீர்களா? தயவாக அந்த கடிதத்திலுள்ளவைகளை படித்து, அதன்படிக்கு உங்கள் வாழ்வை ஆராய்ந்து பார்பீர்களா? அந்த மனிதனைப் போலவே, உங்கள் சபையின் மேய்பரானவர், உங்கள் வாழ்க்கையிலே இன்னென்ன மாற்றங்கள் இன்றியமையாதது என்று கூறினால், நீங்கள் என்ன கூறுவீர்கள்? உங்களில் சிலர், இந்தப் மேய்பரானவர் நன்றியில்லாதவர், இவர் இன்னும் அனுபவிக்க வேண்டும் என்று கூறுவீர்கள் அல்லவா? இவர் நியாயப்பிரமாண போதகர் போல இருக்கின்றார், அன்பைக் குறித்து அறியாமல், பரிசுத்தத்தை குறித்தே அதிகம் பேசுகின்றார் என்று இன்னும் சிலர் கூறிக் கொள்வார்கள். இந்த சம்பவத்தை நாம் பிலிப்பிய சபைக்கு எழுத்தின நிருபத்திற்கு ஒப்பிட முடியும். தேவ ஊழியராகிய பவுல் அவர்களுக்கு எழுதும் போது, உங்கள் கொடுக்கும் மன்பான்மை மெச்சத்தக்கது. அது மாத்திரம் தேவ அன்பு அல்ல. உங்கள் மேலான அழைப்பை அறிந்து கொள்ளுங்கள். எதற்காக பிடிக்கப்பட்டீர்கள் என்பதை புரிந்து கொள்ளுங்கள். தேவ அன்பை அறிந்து அதில் வளரும்படிக்கு, நீங்கள் உங்கள் வாழ்க்கையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதை அவர்களுக்கு தயவாக எடுத்துக் கூறுகின்றார். நாமும் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்க உள்ளா மனிதன் நாளுக்கு நாள் புதிதாக்கப்பட வேண்டும்

**2 கொரிந்தியர் 4:16**

உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது.

**ஜெபம்**: நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, நான் இந்த உலகத்தால் கறைபடாதபடிக்கு உம்முடைய சத்திய வார்த்தைகளில் நடக்க, எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தானதர்மம் செய்யும் மனம் பெருகவேண்டும்

**2 கொரிந்தியர் 8:7**

**மற்றெல்லாக் காரியங்களிலும், நீங்கள் பெருகியிருக்கிறதுபோல, இந்தத் தர்மகாரியத்திலும் பெருக வேண்டும்.**

விசுவாசிகள் வளர வேண்டிய இடங்களை அல்லது மாற வேண்டிய இடங்களை சுட்டிக் காட்டுதலை வேதத்திலே ஆரம்பத்திலிருந்து காணலாம். பழைய ஏற்பாட்டின் காலத்திலே விசுவாசிகள் என்ற பதத்தை பயன்படுத்தாமல், தேவ ஜனங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தானதர்ம காரியமானது கிறிஸ்த வாழ்விலே இன்றியமையாததொன்றாக இருக்கின்றது என்பதை வேத வார்த்தைகள் வழியாக நாம் அறிந்து கொள்ளலாம். அக்காலத்திலே மக்கெதோனியா நாட்டை சேர்ந்தவர்கள் இந்த தானதர்ம காரியத்திலே தேவ கிருபை பெற்றவர்களாக இருந்தார்கள். பிலிப்பி சபையானது மக்கெதோனியா நாட்டிலே இருந்தது குறிப்பிடத்தக்கது. அதாவது, சட்டப்படி ஒரு பகுதியை தானதர்மத்திற்கு கொடுத்தேன் என் கடமை தீர்ந்தது என்று எண்ணாமல், விசுவாசிகளுடைய மனமானது பெற்றுக் கொள்வதைப் பார்க்கிலும் கொடுப்பது மேன்மை என்பதிலே வளர வேண்டும். சிலர் போதிப்பிலும், மற்ற எல்லாக்காரியத்திலும் வளர்ந்திருந்தாலும், தானதர்ம விஷயத்திலே ஒரு நிலையிலே நின்று விடுகின்றார்கள். தேவ ஊழியராகிய பவுல், கொரிந்து பட்டணத்திலுள்ள சபைக்கு எழுதும் போது, “அன்றியும் சகோதரரே, மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்கு தேவன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம். அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்பதற்கு, நான் சாட்சியாயி ருக்கிறேன். தங்கள் உபகாரத்தையும், பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தர்ம ஊழியத்தின் பங்கையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளும்படி அவர்கள் எங்களை மிகவும் வேண்டிக்கொண்டார்கள். அல்லாமலும், விசுவாசத்திலும், போதிப்பிலும், அறிவிலும், எல்லாவித ஜாக்கிரதையிலும், எங்கள் மேலுள்ள உங்கள் அன்பிலும், மற்றெல்லாக் காரியங்களிலும், நீங்கள் பெருகியிருக்கிறதுபோல, இந்தத் தர்மகாரியத்திலும் பெருக வேண்டும். இதை நான் கட்டளையாகச் சொல்லாமல், மற்றவர்களுடைய ஜாக்கிரதையைக்கொண்டு, உங்கள் அன்பின் உண்மையைச் சோதிக்கும் பொருட்டே சொல்லுகிறேன் என்று கூறியிருக்கின்றார். தர்ம காரியங்கள் அன்பின் உண்மையை சோதித்தறிய உதவி செய்யும்.

**ஜெபம்**: பரலோக தேவனே, நான் இவ்வளவு செய்தேன், சட்டப்படி செய்தேன் என்ற மனத்தைவிட்டு, மனதார தானதர்மங்களிலே எப்பொழுதும் வளர்ந்து பெருகும்படிக்கு நீர் என்னில் செய்கையும் விருப்பத்தையும் உண்டாக்குவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கிறிஸ்துவைக் குறித்த மேன்மை

ஒரு கம்பனியிலே வேலை பார்த்து வந்த விசுவாசியாவன், தனக்கு கிடைக்கும் சந்தர்பங்களிளெல்லாம், தான் கிறிஸ்தவன், ஞாயிறுதோறும் சபைக்கு செல்பவன், கிழமைநாட்களிலே ஜெப கூட்டங்களிலே பங்கு பற்றுவன் என்பதை உடன் வேலையாட்களுக்கு தெரிவித்து வந்தான். அதனாலே, சிலர் அவனோடு நட்பை ஏற்படுத்திக் கொண்டார்கள், பலரோ அவனுடைய நட்பை விரும்பவில்லை. அதனால், அவனுடைய முன்னேற்றங்களும், பதவியுயர்வுகள் தாமதமாயிருந்தது. எனினும், அவன் அதைக் குறித்து கவலையடையவில்லை. கர்த்தர் ஒருவனை உயர்த்த நினைத்தால், அவனை யாரும் தடை செய்ய முடியாது. நான் இந்த உயர்ந்த ஆசனங்களிலே இருக்க வேண்டும் என்று கர்த்தர் நிச்சயித்திருந்தால், அதற்கு ஒரு முக்கிய காரணம் இருக்கும். அவர் அப்படி நிர்ணயித்திருந்தால் அதை ஒருவனும் தடை செய்ய முடியாது என்பதே அவனுடைய விசுவாசமும் அறிக்கையுமாக இருந்தால். ஒருநாள், அவனுடைய சக வேலையாட்களில் ஒருவன் அந்த விசுவாசியை அணுகி, தானும் ஒரு விசுவாசி என்று கூறிக் கொண்டான். ஆனால், அதை தான் மற்றவர்களுக்கு கூற விரும்பவில்லை. எனவே, மற்றவர்கள் எதை சம்பாஷிக்கின்றார்களோ, எந்தப் பாணியில் பேசுகின்றார்களோ அப்படியே பேசிக் கொண்டான். தன்னை ஆண்டவர் இயேசுவின் விசுவாசி என்று கூற தயங்கும் காரணம் என்ன? இப்படிப்பட்டவர்கள் தாங்கள் அடைந்த இரட்சிப்பைக் குறித்து இன்னமும் வெட்முடையவர்களாக இருக்கின்றார்கள். மற்றவர்க ளுக்கு முன்பாக தாங்கள் கிறிஸ்துவினுடையவர்கள் என்று சொல்லிக் கொள்ள வெட்கமடைகின்றார்கள். தேவ ஊழியராகிய பவுலின் நாட்களிலே, கிறிஸ்துவின் சுவிசேஷத்தினிமித்தம்அவர், முகாந்திரம் இல்லாமல், பல ஆண்டுகளை சிறையிலே போடபபட்டார். அதாவது, அந்நாட்களிலிருந்த, மத்தத்தலைவர்கள் மற்றும் அதிகாரிகள், கிறிஸ்துவின் சுசேஷம் தங்கள் மார்க்கத்திற்கும், உலக போக்கிலான வாழ்க்கை முறைக்கும் எதிராக இருபப்தினால், அவரை காவலிலே வைத்திருந்தார்கள். அதைக் கண்ட சில விசுவாசமார்க்கத்தார் அவரை விட்டு தங்களை தூரப்படுத்திக் கொண்டார்கள். அப்படியிருந்தும் அவரோ, தனக் கேற்பட்டிருக்கும் நிந்தையான நிலையிலும், கிறிஸ்துவைக் குறித்து வெட்கம் அடையவில்லை. அப்படியாக நீங்கள் எல்லா சூழ்நிலைகளிலும் கிறிஸ்துவைக் குறித்து மேன்மைபாராட்டுகின்றவர்களாக இருங்கள்.

**ரோமர் 1:16**

**கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து நான் வெட்கப்படேன்;**

**ஜெபம்:** மேன்மையான அழைப்பை தந்தவரே, இந்த உலகத்திலே பாடுகள் நிந்தைகள் வந்தாலும், அவைகள் யாவற்றின் மத்தியிலும் நான் உம்மைப் பற்றி கொண்டு சாட்சியாக வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

புதன் | மாசி 4

📖 மாலை வாசகம் – ரோமர் 1:17–18

# ‘நியமித்திருக்கிற ஓட்டத்தில்’

“அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.” என்று 2ம் தீமோத்தேயு 3ம் அதிகாரம் 12ம் வசனத்திலே வாசிக்கின்றோம். இந்த துன்பங்கள் சரீரப்பிரகாரமாகவோ, கல்விகற்கும் நிலையங்களிலே, வேலை செய்யும் இடங்களிலும் செய்முறைகளினாலோ, சொந்த பந்தங்கள் மத்தியிலே வீண் வார்த்தைப் பிரயோகங்களினாலே, உண்டாகலாம். ஒரு வேளை அந்த துன்பமானது நீங்கள் சென்றுவரும் சபையோரால் உண்டாகினாலும் ஆச்சரியப்படாதிருங்கள். இப்படியாக துன்பங்கள் நேரிடும் போது, அந்த துன்பங்களை விசுவாசிகளும், மற்றய மனிதர்களும் வெவ்வேறான போக்கிலே நோக்கிக் கொள்கின்றார்கள். விசுவாசமார்கத்தார் என்று பெயர் பெற்ற சிலர், அவபக்தியாய் நடந்து அவமானங்களை தங்களுடையதாக்கிக் கொள்வதோடு, தேவ பக்தியாய் நடக்கின்றவர்களுக்கு பல துன்பங்களை ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். இன்றைய நாட்களிலும், சில இடங்களிலே, கிறிஸ்துவின் நிமித்தம், சிலர் சரீரத்திலே பாடுகளை அனுபவிக்கின்றார்கள். சிலர் சிறைப் படுத்தப்பட்டிருக்கின்றார்கள். சிலர் அவர்களை குறித்து ஞானமற்றவர்கள் என்று கூறிக் கொள்கின்றார்கள். வேறு சிலர், தங்களை எதிர்கின் றவர்களுக்கு ஏற்றபடி கிறிஸ்துவின் உபதேசத்தை மாற்றி, மத நல்லிண கங்களை ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். இது தேவ ஞானம் அல்ல, லௌகீக ஞானம். வஞ்சிக்கப்பட்டுப்போன இன்னும் சிலர், சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்க முயற்சி செய்கின்றார்கள். அப்படிப்பட்ட மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. மேலான ராஜ்யத்தி கென்று அழைப்பை பெற்ற சகோதர சகோதரிகளே, அநேகருக்கு வேதம் கூறுகின்ற பிரகாரமாக, “பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்துநிற்கவில்லையே.” அதாவது, இரத்த சாட்சிகளாக மரிக்க வேண்டும் என்கின்ற நிர்பர்ந்தம் அநேகருக்கில்லை. அப்படியிருந்தும், நீங்கள் கிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு வெட்கமடைந்தால், பாடுகள் வரும் போதும் எங்கே நிற்பீர்கள் என்பதை சிந்தித்துப் பாருங்கள். எனவே, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி முன்னேறிச் செல்வோமாக.

**எபிரெயர் 12:1**

நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்;

**ஜெபம்:** அன்பின் தேவனே, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிற இயேசுவைப் போல இனிவரும் மேன்மையை உணர்ந்து முன்னேற கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ சித்தம் நிறைவேற வேண்டும்...

"அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம்மரணஅவதியில் அகப்பட்டவன். யூதர்களால் ஒன்று குறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன். மூன்றுதரம் மிலாறு களால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற் சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கி னேன். அநேகந்தரம் பிரயாணம்பண்ணினேன் ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும் பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன் என்று தன்னுடைய ஊழியத்திலே தனக்கு நேர்ந்த துன்பங்களைக் குறித்து தேவ ஊழியராகிய பவுல் 2 கொரிந்தியர் 11ம் அதிகாரத்திலே சுருக்கமாக குறிப்பிட்டிருக்கின்றதை காணலாம். இதை எதற்காக அவர் கூறியிருக்கின்றார்? மற்றவர்களிடம் இருந்து அனுதாபத்தையும், உபத்திரவத்தையும் பெற்றுக் கொள்ளும்படிக்காகவா?இல்லை! இவைகளை குறித்து மேன்மைபாராட்டாமல், மரணமானாலும், ஜீவனானாலும், ஆண்டவர் இயேசுவினால் உண்டான நற்செய்தியை யாவருக்கும் அறிவிக்க வேண்டும் என்பதும், சத்தியத்தை அறிந்தவர்கள் வஞ்சிக்கப்பட்டு போகாமல், தேவனுடைய வார்த்தையிலே ஊன்றி கட்டப்பட வேண்டும் என்பதற்காகவுமே அவர் பிரயாசப்பட்டார். தான் சிறையிலே போட்டப்பட்டிருப்பது, ஆண்டவர் இயேசுவின் சுவிசேஷத்திற்காகவே என்பதை அவர் ஐயம் ஏதும் இல்லாமல் அறிந்திருந்தார். ஆனால், அதை அறியாது சில ஊழியர்களும், விசுவாசிகளும் அவரைக் குறித்து இடறலடைந்தார்கள். அவர்கள் அவ்வண்ணமாக இடறல் அடையக் கூடாது என்பதற்காக, "சகோதரரே, எனக்குச் சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்றென்று நீங்கள் அறிய மனதாயிருக்கிறேன்." பிலிப்பி சபையிலுள்ளவர்களை திடப்படுதினார். எனவே, நன்மை செய்து பாடநுபவவிக்கின்றவர்களை குறித்து இடறலடையாமல், நாம் நித்திய ஜீவனுக்கென்று அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதை அறிந்து அந்த நோக்கம் நிறைவேற வேண்டும் முன்னேறிச் செல்லுவோமாக.

**2 கொரிந்தியர் 11:28**

**எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது.**

**ஜெபம்:** நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, நீர் அழைத்த நோக்கம் என் மனதிலே எப்போதும் இருக்கும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து உம்முடைய வார்த்தையின் வழியிலே நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# போராட்டங்கள் உண்டு!

சில விசுவாசிகள் மற்றய விசுவாசிகளுடைய வாழ்விலே உண்டாகும் உபத்திரவங்களை கண்டு சோர்ந்து போய்விடுகின்றார்கள். ஆண்டவர் இயேசு எங்களோடிருந்தால், ஏன் இப்படியெல்லாம் நடக்க வேண்டும் என்று சில வேளைகளிலே நொந்து கொள்கின்றார்கள். இவர்கள் சத்தியத்தை அறிய வேண்டிய பிரகாரமாக அறியாததினாலே, தப்பான எண்ணங்கொள்கின்றார்கள். இந்த உலகத்திலே உபத்திரவங்கள் உண்டு. "பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்,கிறிஸ்துவின்மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள். நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள் ஏனென்றால் தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார் அவர்களாலே தூஷிக்கப்படுகிறார் உங்களாலே மகிமைப்படுகிறார். ஆதலால் உங்களில் ஒருவனும் கொலை பாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக்கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது. ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்." என்று பேதுரு எழுதின 1ம் நிருபத்திலே 4ம் அதிகாரம் 12ல் இருந்து 16ம் வசனம் வரை வாசிக்கின்றோம். இன்று செழிப்பின் உபதேசம் மலிந்து கொண்டிருப்பதினால், கிறிஸ்தவர்கள் என்று தங்களை சொல்லிக் கொண்டு, இந்த உலகத்திலே சுகபோகமாக வாழ்கின்றவர்களை கண்டு உண்மையான மனதுடன் போராட்டங்கள் மத்தியிலே வாழும் விசுவாசிகளும் மனச்சோர்வு அடைந்து விடுகின்றார்க்ள. நாம் இன்னும் இந்த அநித்திய மான உலகத்திலே இருப்பதினாலே, ஆவிக்குரிய போராட்டம் உண்டு. அதன் மத்தியிலும் நாம் கிறிஸ்துவுக்குள் மகிழ்ச்சியாய் இருக்கும்படிக்கு அவர் மகிமையின் நம்பியாக நமக்குள்ள வாசம் பண்ணுகின்றார். அவர் எப்படி இந்த உலகதை ஜெயித்தாரோ, அப்படியே நாமும், ஜெயிக்கும்படிக்கு தம்முடைய வார்த்தையின் வழியிலே நம்மை வழிநடத்திச் செல்கின்றார். எனவே கிறிஸ்துவை தரித்திருக்கும் நாம் சோர்ந்து போகால் முன்னேறிச் செல்வோமாக.

**1 பேதுரு 4:16**

**ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்.**

**ஜெபம்:** பரலோக பிதாவே, சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் நாடித் தேடி, நீர் அருளும் நித்தியஜீவனை பெற்றுக் கொள்ளும்படிக்கு எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பெற்றுக் கொண்ட பணி எது?

ஒரு கிராமத்திலே வாழ்ந்து வந்த முதலாளியொருவன், பலசரக்கு கடை யொன்றை ஆரம்பித்து அதை நன்றாக நடத்தி வந்தான். அவனுடைய வியாபாரம், கிராம மக்களுக்கு பிரயோஜனமும், அவனுடைய வாழ் விற்கு நல்ல ஆதராமாகவும் இருந்து வந்தது. சில ஆண்டுகளுக்கு பின் அதே கிராமத்திலே வசித்து வந்த மனிதனொருவன், இந்த கிராமத்திலே வாழ்பவர்களும், இந்த கிராமத்தை கடந்து செல்லும் அந்நியர்களும், இளைபாறி தாகம் தீர்க்க ஒரு இடம் இல்லை என்று கண்டு, ஒரு தேநீர் சிற்றுண்டு கடையை ஆரம்பித்தான். அது மிகவும் நன்றாக வளரந்து வருவதை கண்ட, பலசரக்கு கடை முதலாளியானவன் எரிச்சல் அடைந் தான். தன் கடைக்கு பக்கத்திலே ஒரு சிறிய கொட்டிலைப் போட்டு, தானும் ஒரு தேநீர் சிற்றுண்டி சாலையை ஆரம்பித்தான். தன் கடைக்கு பலசர க்கு வாங்கும்படி வரும் மனிதர்களை, மற்றய தேநீர் கடைக்கு போகவே ண்டாம், என்னுடைய தேநீர் சலை யிலே எல்லாம் குறைந்த விலைக்கு பெற்றுக் கொள்ளலாம் என்று மனிதர்களை குழப்பிக் கொண்டிருந்தான். நாளடைவிலே தன் கடையை பார்ப்பதா, தன் தேநீர் சாலையைப் பார்ப்பதா அல்லது மற்றய மனிதன் அவனுடைய தேநீர் கடையிலே என்ன செய்கின்றான் என்று பார்ப்பதா என்று அவனும் குழப்படைந்து போனான். நித்திய ஜீவனுக்கென்று அழைக்கப்பட்ட சகோதர சகோதரிகளே, இன்று சில சபைகளுடைய நிலையும் அந்த பலசரக்கு கடை முதலாளியின் நிலையைப் போலே மாறிவிடுகின்றது. பெற்றுக் கொண்ட தாலாந்தின்படி தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதைவிட, கடைக்கு வரும் வாடிக்கையாளர் களை எப்படியாவது தக்க வைக்க வேண்டும் என்பதே பிரதான நோக்கமாக மாறிவிடுகின்றது. தேவ ஊழியராகிய பவுலின் நாட்களிலும், சகோதரரில் அநேகர், அவருடைய சிறையிருப்பானது கிறிஸ்துவின் நிமித்தம் உண்டானது என்று அறிந்து போது, அவருடைய கட்டுக ளாலே கர்த்தருக்குள் திடன்கொண்டு பயமில்லாமல் திருவசனத்தைச் சொல்லும்படி அதிகமாய்த் துணிந்திருந்தார்கள். சிலர் பொறாமையி னாலும் விரோதத்தினாலும், சிலர் நல்மனதினாலும் கிறிஸ்துவைப் பிரசங்கித்தார்கள். அதைக் கேள்விப்பட்ட ஊழியராகிய பவுலோ, எரிச்சலடையல்லை, மாறாக கிறிஸ்துவின் சுவிசேஷம் அறிவிக்கப்படு வதை குறித்து சந்தோஷமடைந்தார். நீங்களும் குழப்பமடையாமல், நீங்கள் பெற்ற பொறுப்பை நிறைவேற்றுங்கள்.

**பிலிப்பியர் 1:18**

**எப்படியாவது, கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார்; அதனால் சந்தோஷப்படுகிறேன், இன்னமும் சந்தோஷப்படுவேன்.**

**ஜெபம்:** அன்பின் பரலோக பிதாவே, நான் பெற்றுக் கொண்ட பொறுப்பை நல் மனதோடும், உண்மையோடும் செய்து முடிக்கும்படிக்கு நீர் எனக்கு பெலன் தந்து என்னை உம்முடைய வார்த்தையின்படி நடத்திச் செல் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அழைப்பிலே நிலைத்திருங்கள்

கண் சம்மந்தமான வியாதியையுடைய மனிதனொருவன், இருதய நோய்க்கு வைத்தியம் செய்யும்படி பாண்டித்தியம் பெற்ற வைத்தியரொருவரிடம் சென்றிருந்தான்.இருதய நோய்க்கு வைத்தியம் செய்யும் வைத்தியர் அவனுக்கு என்ன சொல்வார்? நீ நேரமெடுத்து இங்கு வந்திருக்கின்றாய். எனவே நான் உன் கண்ணுக்கு வைத்தியம் செய்வேன் என்று சொல்வாரா? இல்லை. அவனை கண் வைத்தியரிடம் போகும்படி கூறிவார் அல்லவா? அந்த வைத்தியர் தன்னுடைய அழைப்பை அறிந்து அதன்படி செயற்பட்டு வந்தார். உலகத்திலுள்ளவர்கள் ஞானமாய் நடந்து கொள்ளும்போது, தங்களை தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்லிக்கொள்கின்றவர்கள் எவ்வளவு தேவ ஞானத்தோடு நடந்து கொள்ள வேண்டும். இன்று சில இடங்களிலே தேவ பிள்ளைகள் என்று தங்களை சொல்லிக் கொள்ளும் ஊழியர்களுக்கு இடையிலே போட்டி பொறாமைகள் ஏற்பட்டு வருவது வெளியரங்கமாக இருக்கின்றது. அந்த நச்சுத்தன்மையானது நாளடைவிலே அவர்களை பின்பற்றும் விசுவாசிகளையும் பற்றிக் கொள்கின்றது. இதைக் குறித்து தேவ ஊழியராகிய பவுல் கூறும் போது: "அல்லாமலும், எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும். ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராததுபோல, அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம். நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப்பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன். ஊழியஞ்செய்கிற வன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன் பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன் முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன் இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்" என்று ஆலோசனை கூறியிருக்கின்றார். எனவே, பெற்று அழைப்பிலே நிலைத்திருங்கள்.

**1 கொரிந்தியர் 12:4-5**

**வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே.**

**ஜெபம்:** என் தேவனாகிய கர்த்தாவே, நீர் உமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சபையாகிய சரீரத்திலே வைத்திருக்கின்றீர். நான் என்னுடைய பங்கை சிறப்பாய் செய்து முடிக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வாழ்வின் நோக்கம் என்ன?

சில வேளைகளிலே, விதண்டாவதங்களுடனும், போட்டி மனப்பான்மை யுடனும், நன்மையானவைகளை செய்ய முயற்சிப்பவர்களை நீங்கள் சந்தித்து இருக்கலாம் அல்லது சந்திக்க நேரிடலாம். தேவனாகிய கர்த்தர் எதை எனக்கு செய்ய சொல்கின்றார் என்பதைக் குறித்து சிந்திப்பதைவிட, மற்றவன் அதை செய்ய முதல் நான் செய்ய வேண்டும் என்னும் எண்ணத்துடன் செயற்படுகின்றவர்களும் இருக்கின்றார்கள். சிலர் சுத்தமனதோடே கிறிஸ்துவை சேிக்காமல், விரோதத்தினாலே சேவிக்கின்றார்கள். அவர்கள் எதை நோக்கமாக கொண்டிருக்கின்றார்களோ, அதற்குரிய பலனை அடைவார்கள். நீங்களோ, தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு நியமித்ததை செய்வதிலே உங்கள் மனதை தக்கவைத்துக் கொள்ள வேண்டும். தேவனாகிய கர்த்தரால் நியமிக்கப்பட்டவைகள் நிலைத்திருக்கும்.இந்த உலகிலே வாழும் மனிதர்களிடம், உங்கள் வாழ்வின் நோக்கம் என்ன என்று கேட்டால், அவர்கள் என்ன கூறுவார்கள்? கல்வி கற்க வேண்டும், கைநிறைய உழைக்க வேண்டும், வீடு நிலங்களை கொள்வனவு செய்ய வேண்டும், திருமணமாக வேண்டும், முதலீடு செய்ய வேண்டும், பின்பு மனிதர்கள் மத்தியிலே நற்பெயரை பெற்றுக் கொள்ள தானதர்மங்கள் செய்ய வேண்டும் என்று பல காரியங்களைநேர்த்தியாக வரிசைப்படுத்தி கூறிக் கொள்வார்கள். பொதுவாக அவர்களுடைய குறிக்கோள்களிலே குற்றங்களோ, பாவங்களோ இருப்பதைப் போல தெரியவில்லை. விசுவாசிகளும் அவ்வண்ணமாக செய்து, தேவனாகிய கர்த்தர் தங்களை ஆசீர்வதித்திருக்கின்றார் என்று கூறிக் கொள்கின்றார்கள். நம்முடைய வாழ்வின் குறிக்கோள் அது தானே? தான் ஒரு விசுவாசியின் வாழ்வின் நோக்கம் என்ன? இந்த பூமியிலே நன்றாக வேர்விட்டு வளர்ந்து நிலைத்திருப்பதா? தேவ சித்தத்தை நடப்பிப்து முழு நேர ஊழியத்திற்கு தங்களை ஒப்பு கொடுத்து வர்களுக்கு மட்டுமா? கல்வி, வேலை, வீடு வாசல், திருமணம், போன்றவைகளுக்கு பின்னர் தான் தேவ சித்தத்தை செய்யவேண்டும் என்பதை குறித்து சிந்திப்பது சரியாகுமா? வாழ்வின் நோக்கம் என்ன என்பதை சற்று தரித்திருந்து சிந்தித்துப் பாருங்கள். இவ்வளவு காலமாக எவைகளை சாதித்திருக்கின்றோம்?அவைகளிலேஎவை பரலோகம் வரைக்கும் நிலைநிற்பவைகள் என்பதை ஆராய்ந்து அறிந்து செயற்படுங்கள். சத்திய ஆவியானவர்தாமே உங்களுக்கு துணை நின்று நடத்திச் செல்வாராக.

**யோவான் 6:27**

**அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்;**

**ஜெபம்:** நித்திய வாழ்விற்கென்று என்னை அழைத்த தேவனே, என்னை என்ன நோக்கத்திற்காக வேறு பிரித்திரோ, அந்த நோக்கம் என்னில் நிறைவேறும்படிக்கு நீர் என்னை கரம்பித்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கிறிஸ்துவின் சாட்சிகள்!

தேவ ஊழியராகிய பவுல், ரோமாபுரியிலிருந்த சிறையிலிருந்து பிலிப்பி யருக்கு எழுதின நிரூபத்தைக் குறித்து இந்த வருட ஆரம்பத்திலிருந்து தியானித்து வருகின்றோம். அவர் ரோமபுரியிலுள்ள சிறைக்கு சென்ற விபரமாவது. அப்போஸ்தலராகிய பவுல் பென்யமீன் கோத்திரத்தை சேர் ந்த இஸ்ரவேலனாக இருந்தார். அந்த நாட்களிலே யூதேயா முழுவதும் ரோம ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. ஒருவன் ரோமருடைய குடியுரி மையை பெற்றுக் கொள்ளுதற்னான ஏராளமானபணத்தை கொடுக்க வேண் டியிருந்தது. ஆனால், புவுலோ, பிறப் பினாலே ரோம குடியுரிமையை பெற் றிருந்தார். பவுல், கிறிஸ்துவின் இரடசி ப்பின் நற்செய்தியை எருசலேமிலே யுள்ள யூதர்களுக்கு பிரசங்கிங்கும் படி திரும்பி வந்திருந்தார். அங்கிரு ந்த யூதர்களில் சிலர் ஜனங்களை பவுலுக்கு எதிராக ஏவிவிட்டு, எருசலே மிலே கலகத்தை உண்டுபண்ணினார்கள். அவர்கள் அவனைக் கொலை செய்ய எத்தனிக்கின்றார்கள் என்பது சேனாபதிக்குச் செய்திவந்த போது, பவுலை, இரண்டு சங்கிலிகளினாலே கட்டி காவலிலே வைத் தார் கள். அன்று இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று: பவுலே, திட ன்கொள் நீ என்னைக்குறித்து எருசலேமிலே சாட்சிகொடு த்ததுபோல ரோமாவிலும் சாட்சிகொடுக்கவேண்டும் என்றார். பின்பு அவர்கள் புவுலை விசாரணை செய்தார்கள். பவுலிடத்தில் குற்றம் ஏதும் காண ப்படாதபடிகயினாலே அவரை விடுவிக்கமனதாயிருந்தார்கள். ஆனா லும், மதத்தலைவர்கள் அவரை கொலை செய்யும்படி வெகுவாய் சதி செய் தார்கள். பவுல், ரோம குடியுரிமையுடையவராக இருந்ததால், ரோம ராஜ்யத்தின் சக்கரவத்தியாகிய இராயருக்கு மேன்முறையீடு செய்தார். அதன்ப டிக்கு அவர் ரோமபுரிக்கு கைதியாக கொண்டு செல்லப்பட்டார். அங்கு காவல் காத்து வந்த ரோம சேவகர்களுக்கு கிறிஸ்துவின் நற்செ சய்தி யை பிரசங்கித்து வந்தார். நாளடைவிலே, அவருடைய சிறையி ருப்பு, கிறிஸ்துவின் நற்செய்தியின் நிமித்தமாக உண்டானது என்று இராய ருடைய அரண்மனையிலுள்ளவர்களுக்கு வெளியரங்கமாகிற்று. கர்த்தர் கூறிய பிரகாரமாக, பவுல், ரோமாபுரியிலும் கர்த்தரை குறித்து சாட்சி கொடுத்தார். சிறையாக இருந்தால் என்ன, சுதந்ததிரமாக இரு ந்தால் என்ன, அவருடைய வாழ்விலே கிறிஸ்துவுக்கு சாட்சி பகர்வ தையே நோக்கமாக கொண்டிருந்தார். அது போலவே நாமும் கிறிஸ்து வின் சாட்சிகளாய் வாழ்வதையே நோக்கமாக கொண்டிருக்க வேண்டும்.

**அப்போஸ்தலர் 23:11**

**நீ என்னைக்குறித்து எருச லேமிலே சாட்சிகொடுத்த துபோல ரோமாவிலும் சாட்சிகொடுக்கவேண்டும்**

**ஜெபம்:** என்னை தெரிந்து கொண்ட அன்பின் பரலோக பிதாவே, எந்த சூழ்நிலையிலும் நான் அழைப்பின் நோக்கத்தை மறந்து போகாமல், உண்மையும் உத்தமமுமான சாட்சியாக திகழும்படி எனக்கு பெலன் தந்து நடத்திச் செல்வீராக. இரட்சகர்இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஜெபமும் வேண்டுதலும்

அன்றுமட்டுமல்ல, இன்றும் பல நாடுகளிலே சிலர் சுவிசேஷத்திற்காக அரும்பாடுபட்டு வருகின்றார்கள். சிலர் நிந்தைகள் அவமானகங்கள் மத்தியிலே ஊழியம் செய்து வருகின்றார்கள். வேறு சிலர், சரீரத்திலே துன்புறுத்த பட்டு, பொருட் சேதம் அடைகின்றார்கள். இன்னும் சிலர், தங்கள் பிராணனை அற்பமாக எண்ணி, கிறிஸ்துவின் நாமத்தின் நிமித்தம், சிறையிலே காவலில் போட்டபட்டுள்ளார்கள். அதுமட்டுல்வ, உயிர்த்தியாகமும் செய்ய ஆயத்தமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். இன்றைய நாளிலே உங்களுடைய பிரச்சனைகள் என்ன? எதற்காக உங்கள் மத்தியிலே கலகங்களும் பிரிவினைகளும் உண்டாகின்றது? அப்படியாக கருத்து வேற்றுமைகளும், முரண்பாடுகளும் ஏற்படும் போது, நீங்கள் என்ன செய்கின்றீர்கள்? மனம் மாறாமல் இடம் மாறுவதில் பலனில்லை என்பதை ஒவ்வொருவரும் நன்றாக அறிந்து கொள்ள வேண்டும். மனித பலத்தில் உறுதியாய் இருக்கும் குழுக்களின் பக்கமாய் நிற்பது மாம்சத்திற்குரிய செயலாக இருக்கும். பிலிப்பிய சபையோர், பவுலுடைய கஷ்டங்களிலே பொருள் உதவியை அனுப்பி வைத்தது மாத்திரமல்ல, அதைவிட மேலாக, பவுலின் விடுதலைக்காக தேவனிடத்திலே வேண்டுதல் செய்து வருகின்றார்கள் என்பதை, தேவ ஊழியராகிய பவுல் தன்னுடைய நிருபத்திலே குறிப்பிட்டிருக்கின்றார். மேலும் அவர் எபேசு சபையோருக்கு ஆவிக்குரிய போராட்டங்கள் குறித்து எழுதும் போது, “எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள். சுவிசேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதியாகிய நான் அதைப்பற்றிப் பேசவேண்டியபடி தைரியமாய்ப் பேசத்தக்கதாக, நான் தைரியமாய் என் வாயைத் திறந்து சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு வாக்கு எனக்கு கொடுக்கப்படும்படி எனக்காகவும் விண்ணப்பம்பண்ணுங்கள்.” என்று தேவ ஆலோசனையை கூறியிருக்கின்றார். எனவே, தனிப்பட்ட வாழ்க்கையிலே, குடும்பங்களிலே, சபைகளிலே குழப்பங்கள் ஏற்படும் போது கலக்காரராக மாறிவிடாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து, நாம் எப்பொழுதும், உயர்விலும், தாழ்விலும், சோதனையிலும் வேதனையிலும், தேவனிடத்தில் ஜெபம் செய்வதற்கும், மற்றவர்களுக்காக வேண்டுதல் செய்வதற்கும் பழகிக் கொள்ள வேண்டும். ஊக்கமாக ஜெபமும், வேண்டுதலும் ஒரு விசுவாசியின் சுபாமாக மாறவேண்டும்.

**1 தெசலோனிக்கேயர் 5:17**

**இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்.**

**ஜெபம்:** அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிக்கும் தேவனே,நான் சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, அழியாமையை தேடுகின்ற உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்ச கர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

📖 மாலை வாசகம் – கலாத்தியர் 5:24 –25

# நீங்களே கிறிஸ்துவின் சரீரம்

இரண்டு நாடுகளுக்கிடையே நேரடியாக நடக்கும் போரை குறித்து நாம் யாவரும் அறிந்திருக்கின்றோம். அதேவேளையிலே, சில நாடுகளுக்கி டையே அரசியல் மற்றும் ஆளுகை முறைமைகளில் இருக்கும் வேற்று மைகளின் அடிப்படையில் மறைமுகமாக நடந்து வரும் பனிப்போர் என்னும் பதத்தையும் அறிந்திருப்பீர்கள் என்று நம்புகின்றேன். வார் த்தைப் பிரயோகங்கள், மறைமுகமான நடைமுறைகளால் நடைபெறும் பனிப்போர் காலப்போக்கில் நேரடி யானபோரை உண்டாக்கிவிடும் அபா யம் உண்டு. அன்றும் இன்றும் விசு வாச மார்க்கத்தார் மத்தியிலே, சரீர பிரகாரமான சண்டைகள், அடிபாடு கள் நடப்பது மிகவும் அரிது. ஆனா லும், ஒரு சில இடங்களிலே ஆங்கா கங்கே இப்படியான நேரடியான போரைப் போன்ற கைகலப்புக்கள் நடை பெறுகின்றது என்பதை கேள்விப்படும் போது, மிகவும் மன வேத னைக்குரிய காரியமாக இருக்கின்றது. ஆனால், விசுவாசிகள் மத்தி யிலே, பனிப்போரை போன்ற மறைமுகமான போர் நடந்து வருகின்றது. வன்மம், கசப்பு, பிரிவினைகள், வைராக்கியம், சண்டைகள், மார்க்க பேதங்கள் போன்ற மாசத்திற்குரிய சுபாவங்கள் விசுவாசிகள் மத்தி யிலே காணப்படுகின்றது. இப்படிப்பட்ட நிலைமை அன்று பிலிப்பு சபை யிலே இருந்துது, அன்றைய நாட்களிலே இருந்து சபைகளிலே இருந் தது. அதற்காகத்தான், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் வழியாக, விசுவாசிகள் எச்சரிப்பின் தேவ வார்த்தைகளையும், மாம்ச மான வாழ்விலிருந்து விடுதலையாகி, ஆவிக்குரியவர்களாக எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை உள்ளடக்கிய வழிமுறைகளையும் விசுவாச மார்க்த்தாருக்கு கூறப்பட்டிருக்கின்றது. சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள். உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிட த்திலும் அன்புகூருவாயாக, என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியா யப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும். நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தீர்களானால் அழிவீர்கள். அப்படி ஒருவராலொருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். பின்னும் நான் சொல்லு கிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொ ழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள் என்று பரிசுத்த வேதா கமம் நமக்கு அறிவுரை கூறுகின்றது.

**1 கொரிந்தியர் 12:27**

நீங்களே கிறிஸ்துவின் சரீ ரமாயும், தனித்தனியே அவ யவங்களாயுமிருக்கிறீர்கள்.

**ஜெபம்**: அன்பின் பரலோக தேவனே, என் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்து, ஆவியின் கனிகள் என் வாழ் விலே வெளிப்படும்படிக்கு நீர் எனக்கு கற்றுத் தந்து வழிடத்திச் செல் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்

# விசுவாசத்திலே நிலைத்திருங்கள்

அன்றைய நாட்களில் ஆண்டவர் இயேசுவின் சீஷர்கள், பல உபத் திரவங்களை சந்தித்து, இரத்தசாட்சிகளாக மரித்தார்கள். இன்றைய நாட் களிலும், சில நாடுகளிலே, விசுவாசிகள், கிறிஸ்துவின் நிமித்தம் தங்கள் சரீரத்திலே பாடுகளை அனுவத்து வருகின்றார்கள். அவர்களுடைய வாழ் க்கையிலே பொருட்சேதம், உயிர்ச் சேதங்களும் நடைபெறு கின்றது என்பதை செய்திகள் வாயிலாக கேள்விப்படுகின்றோம். ஆனால் எங்களில் அநேகர் அத்தகைய விதமாக சரீரத்திலே பாடு படும்படி யான அழைப்பை பெறாதிருந்தா லும், நாவினால் உண்டாகும் வசைச் சொற்களாலும், நம்பிக்கைத் துரோகங்களினாலும், மறுதலிப்பு களினாலும், ஏமாற்றங்களினாலும், ஏறத்தாழ யாவரும், மனவேதனைய டைந்து உபத்திரவங்களுக்குள் ளாகின்றார்கள். நாவினாலே உண்டாகும் வசைச் சொல்லைவிட, சரீரத்திலே இரண்டு அடிகளை ஏற்றுக் கொள் வது எளிது என்று சிலர் சொல்லிக் கொள்வார்கள். ஆனால், ஒரு வேளை சரீரத்திலே பாடுகளை சந்திக்க நேர்ந்தால் அப்போது அவ ர்கள் என்ன சொல்வார்கள் என்பது தெரியாது. கருபொருளாவது, கிறிஸ்தவ வாழ்க்கயிலே போராட்டங்களும் பாடுகளும் உண்டு. ஒரு வேளை தற்போது நாம் சரீரத்திலே பாடுகளை அனுபவிக்க நேரிட்டா லும், அந்த பாடுகள் மத்தியிலும் நம்மை பெலப் படுத்தி, பரம வெற்றி யைத் தர வல்லவர் நம்மோடு இருக்கின்றார் என்ற விசுவாச அறிக்கை நம்மில் காணப்பட வேண்டும். உமதுநிமித்தம் எந்நே ரமும் கொல்லப்ப டுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப் படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும், கிறிஸ்துவின் அன் பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவை யெல்லாவ ற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெய ங்கொள் ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவ தூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ் காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ் வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரி க்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன் என்று தேவ ஊழியராகிய பவுல் கூறியதைப் போல,நாமும் விசுவாச அறிக்கையிலே தளர்ந்து போகாமல் உறுதியாய் நிலைநிற்க வேண்டும். அழைத்தவர் உண்மையுள்ளவர்..

**ரோமர் 8:36**

கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?

**ஜெபம்:** பரலோக தேவனே, நீர் என் பட்சத்திலிருந்தால எனக்கு விரோத மாயிருப்பவன் யார் என்ற சத்தியத்திலே நான் உறுதியாய் தரித்திருந்து, உம் சித்தத்தை நிறைவேற்றி முடிக்க எனக்கு கிருபை செய்வீராக. இர ட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

சனி | மாசி 14

📖 மாலை வாசகம் – எபிரெயர் 12:1 – 2

# நித்தியத்தைக் குறித்த நிச்சயம்

இந்த உலகத்தைவிட்டு கடந்து செல்வதை உண்மையிலேயே சந்தோஷத்தோடே ஏற்றுக் கொள்கின்றவர்கள் எத்தனை பேர்? சில சுகமாக செழிப்பாக வாழும் போது மரணத்திற்கு அஞ்சாதவன், உலகத்திலே பிறந்தவன் எவனும் ஒருநாள் மரிக்க வேண்டும் என்று கூறிக்க கொள்வார்கள். ஆனால், அவர்களுடைய வாழ்விலே, தங்கள் சரீரத்திலே ஏற்படும், சிறிதான சரீர நோய்களை கூட ஏற்றுக் கொள்ள மனதில்லாதவர்களாக இருப்பார்கள். துன்பங்கள் துயரங்கள் வாழ்க்கையிலே சூழ்ந்து கொள்ளும் போது, நான் மற்றவர்களுக்கு தீங்கு நினைக்காதவன்! ஏன் எனக்கு இப்படி நேரிட வேண்டும்? தேவன் எங்கே? என்று சொல்லிக் கொள் வோரும் உண்டு. ஆனால், எங்களு க்கு முன்னோடிகளாக இருந்து, இன் பத்திலும், துன்பத்திலும், உயர்விலும் தாழ்விலும், வெற்றி வாழ்க்கை வாழ்ந்து இந்த உலகத்தை விட்டு, அகற்றப்பட்ட மேகம் போன்ற திரளான சாட்சிகளின் வாழ்க்கையை நோக்கிப் பாருங்கள். இந்த உலகத்திலே தங்களுக்கு ஏற்படும் மரணம், தங்களுடைய பெரிதான முதலீடு என்று கருதி வாழ்ந்தார்கள். அப்படியாக சிந்திப்பதற்கு அவர்கள் என்னத்தை கண்டு கொண்டார்கள். அவர்கள் தங்கள் விசுவாச கண்களால், இனிவரும் மேன்மையை அறிந்துணர்ந்தார்கள். நம்முடைய ஆண்டவராகிய இயேசு தாமே, தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்று எபிரெயர் 12ம் அதிகாரம் 2ம் வசனத்திலே வாசிக்கின்றோம். அதே பிரகாரமாக, தேவ ஊழியராகிய பவுலும், தன்னுடைய வாழ்க்கையைக் குறித்து பிலிப்பி சபைக்கு எழுதும் போது, “கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்.” என்று கூறியிருக்கின்றார். இந்த உலகத்திலே தத்துவம் பேசுகின்றவர்கள் அநேகர் இருந்தார்கள், இப்போதும் இருக்கின்றார்கள். அவர் பெரும் பெரும் வார்த்தைகளை பேசிக் கொள்கின்றார்கள். ஆனால் தாங்கள் போகும் இடம் இன்தென்று அறியாதிருக்கின்றார்கள். ஆனால், ஆண்டவராகிய இயேசுவை அறிந்தவர்கள், இந்த உலகத்திலே வாழும் போது, தேவ ராஜ்யத்திலே மனப்பூர்வமாக தங்களைத் தாங்களே முதலீடு செய்து கொள்கின்றார்கள். ஆதலால், அவர்கள் சென்றடையும் இடத்தை அறிந்திருக்கின்றார்கள். அதனால், சாவைக் குறித்து கலக்கமடையாமல், விசுவாசத்திலே நிலைகொண்டு, மன உறுதியோடு வாழ்கின்றார்கள்.

**பிலிப்பியர் 1:21**

**கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்.**

**ஜெபம்:** நித்திய வாழ்விற்கென்று என்னை அழைத்த தேவனே, அதை உணர்ந்து, அநித்தியமானவைகளிலே என் மனதை தக்க வைத்துக் கொள்ளாமல், நித்தியமானவைளை தேட எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# காரியத்தின் கடைத்தொகை

வாழந்தென்ன மரித்தென்ன? வாழந்து என்னத்தைக் கண்டோம் எல்லாம் ஒன்றுதான் என்று சிலர் தங்கள் மனவிரக்தியில் கூறிக் கொள்கின் றார்கள். மாயை, மாயை, எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லு கிறான். சூரியனுக்குக் கீழே மனுஷன் படுகிற எல்லாப் பிரயாசத்தி னாலும் அவனுக்குப் பலன் என்ன? ஒரு சந்ததி போகிறது, மறு சந்ததி வருகிறது. பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது என்று பிரச ங்கி கூறியதின் கருப்பொருளை அறியாமல், குடித்து வெறித்து சுகபோகமாக வாழ்பவர்களும், எல்லாம் மாயை என்று சொல்லிக் கொள்கின்றார்கள். இப்படிப்பட்ட மலக்கிலேசத்தோடு செத்து போனால் போதும் என்று கூறி வது ஒரு கிறிஸ்தனுக்கு உரியத ல்ல. வாழ்க்கையிலே சவால்கள், போராட்டங்கள், சோதனைகள், வேதனைகள் ஒன்றின் பின் ஒன்றாக வரலாம். ஆவைகளின் மத்தியிலே கிறிஸ்துவின் சாட்சிகளாக நாம் வாழ்ந்து, ஜெயம் கொள்ளும்படிக்கு, தேவ ஆவியானவர்தாமே நமக்கு ள்ளே வாசம் செய்கின்றார். தேவ ஊழியராகிய பவுல், பிலிப்பியருக்கு எழுதும் போது, தான் வாழ்ந்தாலும் சரி, மரித்தாலும் சரி என்று தன் விரக்கதியில் கூறவில்லை. நான் வாழ்ந்தால் கிறிஸ்துவின் பணியிலே இருப்பேன். ஆதனால், பரலோகத்திலே மிகுந்த பலனுக்கு ஏதுவான வைகளை நான் செய்வேன். அப்படியாக நான் சரீரத்திலே இருப்பது உங்களுக்கும் நன்மையாயிருக்கும். ஆனால், சரீரத்தைவிட்டு கடந்து சென்று கிறிஸ்துவோடு இருப்பது எனக்கு அதிக நன்மையாயிருக்கும். இவை இரண்டிலும், என்னை பெலப்படுத்துகின்ற கிறிஸ்துவினாலே, நான் தேவனுடைய சித்தத்தை செய்வதையே நாடுகின்றேன் என்பதை பிலிப்பியருக்கு எழுதிய நிரூபத்திலே வலியுறுத்திக் கூறியிருக்கின்றார். எனவே, எங்களுடைய வாயின் அறிக்கையை குறித்து நாங்கள் எச்சரிக் கையுள்ளவர்களாக இருந்து, எல்லா சூழ்நிலைகளிலும் தேவனுக்கே ற்றவைகளை செய்ய கற்றுக் கொள்ள வேண்டும். அப்படியாக நாங்கள் தேவ சித்தத்தை செய்யும் போது, இந்த உலகத்தைவிட்டு கடந்து செல்லும் பயமானது எங்களைவிட்டு அகன்று போகும். முாறாக, அந்த நாளைக் குறித்து சந்தோஷம் மனதிலே உண்டாகும். ஆனால், அதுவும் தேவனுடைய நேரத்திலே நடக்கும் என்பதை நாம் அறிக்கை செய்ய வேண்டும்.

**பிரசங்கி 12:13**

**காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே.**

**ஜெபம்:** அன்பின் தேவனே, உமக்கு விரோதமான காரியங்களை செய்வதற்கு வரும் தடைகளை கண்டு பயப்படாமல், உமக்கு பயந்து உமது வழியிலே நடக்கும் உண்மையுள்ள விசுவாசியாக இருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

 🕮 மாலை வாசகம் – 2 தீமோ 4:6–8

# நல்ல வழிகாட்டிகளாக இருங்கள்

சிலவேளைகளிலே, வாழ்க்கையிலே நெருக்கங்கள் ஏற்படும் போது, சில விசுவாசிகள் தாங்கள் போகும் வழியைக் குறித்து சந்தேகம் அடைகின்றார்கள். எடுத்துக் காட்டாக, நான் வீணாக பொருளை சேர்க்காமல் விட்டுவிட்டேனோ? என்னை நாடி வந்த இந்த உலகத்தின் சுகபோககங்கள் அநேகமானதை நான் விட்டுவிட்டேனனே? என் வயோதிபத்தில் நான் என்ன செய்வேன்? போன்ற பற்பல கேள்விகள் அவர்கள் மனதிலே எழுகின்றது. ஆனால், தேவ ஊழியராக பவுலின் வாழ்க்கை ஆராய்ந்து பார்க்கும் போது, அவர் தான் செல்லும் பாதையை குறித்து, அதாவது, கிறிஸ்துவை தரித்துக் கொண்டு வாழ்வதைக் குறித்து மிகவும் திட நம்பிக்கையுடையவராக இருந்தார். அவர் கொரிந்து சபையோருக்கு எழுதும் போது “நீங்கள் எனக்குப் பிரியமான பிள்ளைகளென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்தியாயர்கள் உங்களுக்கு இருந்தாலும், தகப்பன்மார் அநேகர் உங்களுக்கு இல்லையே. கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன். ஆகையால், என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்களென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.” என்று கூறியிருக்கின்றார். கிறிஸ்துவிள் சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு அறிவித்து, அவர்களுக்கு உபதேசம் செய்வதோடு நின்றுவிடாமல், அவர்கள் தவறும்போது, தன்னிடம் சேரும்படியாக ஒரு நல்ல தகப்பனுடைய உள்ளம் உடையவராக இருந்து வந்தார். மேலும், தீமோத்தேயுக்கு எழுதும் போது, “நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்.” என்ற திடநம்பிக்கையுடையவராக இருந்தார். இப்படிப்பட்ட ஊழியர்கள் அன்றுமட்டுமல்ல, இன்றும் காண்பது அரிதாகவே இருக்கின்றது. ஆதலால், தான் எப்படி கிறிஸ்துவை அறிந்து பின்பற்றுகின்றேனோ, அதே மாதிரியை பின்பற்றும்படியாக பிலிப்பியருக்கு அறிவுரை கூறுகின்றார். விசு வாசிகள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்பரவானவர்களாக ஆயத்த ப்பட வேண்டும். அவர்களுடைய உபத்திரவங்கள் மத்தியிலே விசுவாசம் பெருகும்படிக்கு, அவர்களுக்கு ஒரு நல்ல வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்னும் எண்ணமானது எங்களிலும் பெருக வேண்டும். நாங்கள் மற்றவர்களுக்காக இவ்வண்ணமாக வேண்டுதல் செய்ய வேண்டும்.

**பிலிப்பியர் 1:24**

**அப்படியிருந்தும், நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம்.**

**ஜெபம்**: பரலோகத்திற்கு வழிகாட்டும் தேவனே, நான் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலே உறுதியாய் தரித்திருந்து, மற்றவர்களுக்கு விசுவாசத்தின் வர்த்தனைக்கு ஆதரவாக இருக்கும்படிக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கி றேன் ஆமென்.

# கிறிஸ்துவை பற்றிக் கொள்ளுங்கள்!

வனாந்திர யாத்திரைக்கு ஒப்பாக இருக்கும் இந்த வாழ்க்கையிலே முன்னோடிகளாக செல்லும் வழிகாட்டிகளின் ஆதரவை பெற்றுக் கொள்வது நல்லது. அதாவது, பண ஆசையில்லாதவர்களாய், இயேசு கிறிஸ்துவிலே உறுதியாய் நிலைத்திருந்து, சாட்சியான வாழ்க்கை வாழ்பவர்களின் ஆலோனைகளை பெற்றுக் கொள்வது நல்லது என்பதை குறித்து சத்திய வேதத்திலும் நாம் வாசிக்கலாம். ஆனால், இன்று சிலர், சில மனிதர்களை தங்கள் விக்கிரகங்களாக மாற்றிவிடுகின்றார்கள். இன்னார் எனக்கு ஜெபிக்க வேண்டும். அவர்தான் என் வழிகாட்டி, அவருக்கு தான் நான் ஆதரவு கொடுப்பேன் என்று உலகத்தார் சில நட்சத்திரங்களுக்கு இரசிகர்களாக இருப்பதைப் போல மாறிவிடுகின்றார்கள். அதாவது, ஆண்டவராகிய இயேசு ஒருவரே மத்தியஸ்தர் என்ற சத்தியத்தைவிட்டு விலகி விடுகின்றார்கள். நாம் அப்போஸ்தலராகிய பவுல், பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தை ஆராய்ந்து தியானித்து வருகின்றோம். தேவ ஊழியராகிய பவுல், தன்னை பின்பற்றும்படி கூறாமல், தான் எப்படியாக கிறிஸ்துவை பற்றிக் கொண்டு இருக்கின்றேனோ, அதுபோலவே நீங்களும் கிறிஸ்துவை அறிந்து பற்றிக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். கொரிந்து பட்டணத்திலுள்ள சபையிலே, இவ்வண்ணமாக விசுவாசிகள் மனிதர்களை சார்ந்து வாழ ஆரம்பித்தார்கள். தேவ ஊழியராகிய பவுல் அவர்களை கண்டித்து கூறியதாவது: “ஒருவன் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், வேறொருவன் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நீங்கள் மாம்சத்திற்குரியவர்களல்லவா? பவுல் யார்? அப்பொல்லோ யார்? கர்த்தர் அவனவனுக்கு அருள் அளித்தபடியே நீங்கள் விசுவாசிக்கிறதற்கு ஏதுவாயிருந்த ஊழியக்காரர் தானே. நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான், தேவனே விளையச்செய்தார். அப்படியிருக்க, நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச்செய்கிற தேவனாலே எல்லாமாகும்.” என்று கூறியிருக்கின்றார். எனவே, நல்ல ஊழியர்களை பின்பற்றுவதென்பது, அவர்களை தேவனுடைய ஸ்தானத்திற்கு உயர்த்தி வைப்பதல்ல. மாறாக, அவர்களைப்போல நாமும் ஆண்டவர் இயேசுவை பற்றிக் கொண்டு, அவருடைய வார்த்தையின் வழியிலே வாழ பழகிக்கொள்ள வேண்டும். எவரும் மத்தியஸ்தர்களாக முடியாது. கிறிஸ்து ஒருவரே மத்தியஸ்தர்.

**1 கொரிந்தியர் 1:13**

**கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்?**

**ஜெபம்:** என்னை நல் வழியிலே நடத்தும் தேவனே, உம்மைப் பின்பற்றி வெற்றி வாழ்க்கை வாழ்ந்த மனிதர்களைப் போல, நானும் உம்மைப்பற்றிக் கொண்டு உம் வார்த்தையின் வழியிலே வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தந்தையின் உறவிலே வளருங்கள்!

ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள் (*காலத்தியர் 6:2*). நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும். (*1 தீமோத்தேயு 2:1*) சகோதரரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள். (*1 தெச 5:25*). அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. (*பிலிப்பியர் 2:4*). இப்படியாக ஒருவர் பாரத்தை ஒருவர் சுமப்பது, யாவருக்காகவும் வேண்டுதல் செய்வது, மற்றவர்களுக்காக பரிந்தி பேசி ஜெபிப்பது போன்ற குணாதியங்கள் விசுவாசிகளின் அடிப்படைப் பண்புகளாக இருக்க வேண்டும். அதே நேரத்திலே மற்றவர்கள் எப்போதும் எங்களுக்காக ஜெபிக்க வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டு இருக்காமல் நாமும் மற்றவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். ஜெப வாழ்க்கையிலே வளர வேண்டும். குழந்தைகளைப்போல நாம் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் ஆனால் எப்போதும் குழந்தைத்தனமுள்ளவர்களாக இருக்க கூடாது. பிதாவாகிய தேவனை அறிகின்ற அறிவிலே வளரவேண்டும். ஒரு தகப்பனோடுள்ள உறவிலே எப்படி ஒரு பிள்ளை வளர்கிறது போல, நாமும் அந்த உறவிலே வளர வேண்டும். ஏன் ஒரு பிள்ளையானவன், தன் தகப்பனித்திலே கேட்பதற்கு, பேசுவதற்கு தயங்க வேண்டும்? ஒரே மத்தியஸ்தராகிய அவருடைய குமாரனாகிய இயேசு வழியாக நாம் ஒப்புரவாக்கப்பட்டிருக்கின்றோம். எனவே, வேறு மத்தியஸ்தர்களை நாம் ஏற்படுத்தக் கூடாது. பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்து இந்தப் பூமியைவிட்டு கடந்து சென்ற பரிசுத்தவான்களிடம் வேண்டுதல் செய்யக் கூடாது. தேவ ஊழியராகிய பவுல், பிலிப்பி சபையோரை நேரில் கண்டு, அவர்களை திடப்படுத்த விருப்பமுள்ளவராக இருந்தார். எனினும், நான் வந்து உங்களைக் கண்டாலும், நான் வராமலிருந்தாலும், நீங்கள் ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று, ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாச த்திற்காகக் கூடப்போராடி, எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கிறீர்களென்று உங்களைக்குறித்து நான் கேள்விப்படும்படி, எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராகமாத்திரம் நடந்துகொள்ளுங்கள் என்று அறிவுரை கூறியிருக்கின்றார்.

**யோவான் 17:3**

**ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்.**

**ஜெபம்:** என்னை பலப்படுத்துகின்ற தேவனே, இந்த உலகத்தினால் உண்டாகும் அழுத்தங்களினால் நான் மருளாமலிருந்து பெற்றுக் கொண்ட சுவிசேஷத்திற்கு பாத்திரராய் நடக்கும்படி எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கர்த்தருக்கு பாத்திரராயிருங்கள்

ஒரு விசுவாசியின் வாழ்க்கையிலே, விசுவாசத்தின் போராட்டம் ஓய்ந்து போய்வதில்லை. எனக்கு போராட்டம் இல்லை என்று எண்ணிக் கொள்கின்றவன், தான் எங்கே நிற்கின்றேன் என்பதை ஆராய்ந்து அறிந்து கொள்வது நல்லது. விசுவாச மார்க்கத்தாராகிய யாவரும், எல்லா போராட்டங்களின் மத்தியிலும், தேவன் அழைத்த அழைப்புக்கு பாத்திரராகிய நடந்து கொள்ள வேண்டும். அதைக் குறித்து, தேவ ஊழியராகிய பவுல் எபேசு சபைக்கு எழுத்தும் போது: ஆதலால், கர்த்தர்நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு. ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு அவர் எல்லார்மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர் என்று அறிவுரை கூறியிருக்கின்றார். எனவே ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று, ஒரே ஆத்துமாவினாலே நிலையாய் நிற்க வேண்டும். தனக்குள் தானே நிலைதவறி போகின்றவனாக இருக்காமல். ஊரோடு ஒத்ததோட வேண்டும் என்று சந்தர்ப்பத்திற்கேற்ற பிரகாரமாக வேஷங்களை மாற்றிக் கொள்கின்றவர்களாக இருக்காமல், ஆதியிலே கொண்ட விசுவாசத்திலே அசையாமல் நிலைத்திருக்க வேண்டும். நீதியின் பாதையிலே நடக்கும் போதும், சத்தியத்தை சுத்தமாக பேசும் போதும், நிந்தைகள் அவமானங்கள் உண்டாகலாம். அதனாலே பயந்து பின்னிட்டுப் போகாமல், சுவிசேஷத்தின் விசுவாசத்திலே நிலைத்திருக்க வேண்டும். "சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ள வேண்டும்" (கொலோசேயர் 1:10). தூய ஆவியாகிய துணையாளர் கூட இருந்து வழிநடத்திச் செல்வாராக.

**கொலோசெயர் 1:10**

**சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும்,**

**ஜெபம்**: என்னை அழைத்த தேவனே, விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராடி நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்ளும் மன உறுதியை எனக்கு தந்து, என்னை உம்முடைய வார்த்தையின் வழியிலேந நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

வெள்ளி | மாசி 20

📖 மாலை வாசகம் – பிலிப்பியர் 1:28

# திடமனதோடு நிலைத்திருங்கள்!

“எதிர்கின்றவர்களைமேற்கொள்ளமுடியாவிட்டால், அவர்களோடு இணை ந்து கொள்” என்று மேற்கத்தைய நாடுகளில் வாழும் மனிதர்கள் கூறும் பழமொழியொன்று உண்டு. அதாவது மிகுந்த பலத்தோடும், மேன் மையான யுக்தியோடும் எதிர்த்து வருபவர்களிடம், திரும்பத் திரும்ப தோற்றுப் போய் அவமானப் படாமல், அவர்களோடு இணை ந்து அவர்களுடைய யுத்தியும் பலத்தையும் பின்பற்றுவது நல்லது என்று கூறிக்கொள்கி ன்றார்கள். ஆனால், இந்த பழ மொழியானது ஒரு விசுவாசிக் குரியதல்ல. விசுவாசிகள் விசு வாசத்திலே நிலைத்திருக்கின் றார்கள். ஆனால், ஒருவன் விசு வாசத்தைவிட்டு விலகி செல்லும்போது பயம் அவர்களை மேற் கொண்டு விடுவதால், அவர்கள் சத்துருவாகிய பிசாசானவனுக்கு பய ப்படுகின்றார்கள். சத்திய மார்க்கத்ததைவிட்டு சற்று விலகி, சமரசம் செய்து கொள்கின்றார்கள். ஒரு விசுவவாசியானவனு க்கு எதிர்ப்புக்கள் எப்படி உருவாகின்றது? எங்கே உருவாகின்றது. சில நாடுகளிலே கிறி ஸ்துவின் நாமத்தின் நிமித்தம் துன்புறுத்தப்படுகின் றார்கள் என்பதை நாம் செய்திகள் வாயிலாக அறிந்து கொள்கின்றோம். ஆனால், இன் னும் சில நாடுகளிலே மதச் சுதந்திரம் இருக்கின்றது என்று கூறிக் கொள் கின்றார்கள். அந்த மதத் சுதந்திரத்தின் மத்தியிலும், ஆண்டவர் இயேசு வின்நாமத்தை உச்சரிப்பது, பலருக்கு இடறலாக இருக்கின்றது. வேலை செய்யும் இடங்களிலே, நான் ஞாயிறு தோறும் தேவ ஆலயத்திற்கு சென்று தேவனாகிய கர்த்தரை ஆராதித்து வருகின்றேன் என்று கூறி னால், அந்த இடங்களிலே அந்த விசுவாசிக்கு மறைமுகமான எதிர் ப்பு க்கள் உருவாகிவிடுகின்றது. “சென்ற வாழ்நாட் காலத்திலே நாம் புறஜா திகளுடைய இஷ்டத்தின்படி நடந்துகொண்டது போதும் அப்பொழுது நாம் காமவிகாரத்தையும் துர்இச்சைகளையும் நடப்பித்து, மதுபானம் பண்ணி, களியாட்டுச்செய்து, வெறிகொண்டு, அருவருப்பான விக்கிரகா ராதனையைச் செய்துவந்தோம். அந்தத் துன்மார்க்க உளை யிலே அவர் களோடேகூட நீங்கள் விழாமலிருக்கிறதினாலே அவர்கள் ஆச்சரியப் பட்டு, உங்களைத் தூஷிக்கிறார்கள் என்று 1 பேதுரு 4ம் அதி காரம் 3ம் 4ம் வசனங்கிளலே வாசிக்கின்றோம். நீங்களோ, எந்த சூழ்நி லையிலும் ஆண்டவர் இயேசுவிற்கு சாட்சியாக வாழ்வதற்கு பயப்படாதிருங்கள்.

**1 பேதுரு 5:9**

**விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோத ரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறி ந்திருக்கிறீர்களே.**

**ஜெபம்**: பரலோக தேவனே, இந்த உலகத்திலே இருப்பவனைப் பார்க்கி லும் என்னோடு இருக்கும் நீர் பெரியவர் என்பதைபதை அறிந்து எந்து சூழ்நிலையிலும் மருளாமல் விசுவாசத்தில் நிலைத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உலகத்தோடுள்ள நட்பு?

சில வேளைகளிலே விசுவாசிகள் என்று தங்களை கூறிக் கொள்கின்றவர்கள் ஏன் தோற்றுப் போகின்றார்கள்? ஏன் அவர்களால் இந்த உலகத்திலே தங்களை எதிர்க்கும் சக்திகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் போய்விடுகின்றது? சிறு வயதிலிருந்து ஆண்டவர் இயேசுவனை அறிந்திருந்த வலிபனொருவன், தன் வேலை செய்யும் இடத்திலே புதிய நட்புக்களை தனக்கென ஏற்படுத்திக் கொண்டான். சபையிலே அவனுக்கு ஐக்கியம் இருந்த போதிலும், அவன் ஆண்வர் இயேசுவை அறியாத நண்பனோடே உல்லாசப் பயணங்கள் செய்வதை விரும்பினான். இந்த வாலிபன் அந்த இரட்சிப்படையாத வாலிபானோடு மிகவும் ஐக்கியமாக இருந்தான். அவர்களுடைய ஐக்கியமானது ஆண்டவர் இயேசுவை குறித்தாக இருக்கவில்லை. பல ஆண்டுகள் சென்ற பின்பு, சபைக்கு சென்ற வந்த அந்த வாலிபனானவன், இரட்சிப்படையாத நண்பன் முன்னிலையிலே, ஆண்டவர் இயேசுவை குறித்து உறுதியோடு பேசுவதற்கு தயங்கினான். சத்தியத்தை உறுதியாக கூறாமல், மற்றவர்களின் மனதை புண்படுத்த கூடாது என்று கூறிக் கொள்வான். ஏன் அந்த வாலிபனானவன் அப்படி நடந்து கொண்டான்? இரட்சிப்படையாத நண்பன் முன்னிலையிலே சாட்சியை இழந்து போனாதால், அவன் மனதிலே பயம் இருந்தது. உல்லாச பயணங்கள் செல்லும் போது, ஞாயிற்று கிழமைகளில் செய்த காரியங்களை குறித்த குற்ற உணர்வு அவன் மனதிலே எப்போதும் அழுத்திக் கொண்டிருந்தது. ஒரு விசுவாசியின் நட்பின் ஐக்கியத்தின் இணை ப்பு ஆண்டவர் இயேசுவாக இருக்காவிடின், அந்த ஐக்கியமானது தேவனுக்குரிதல்ல. பிரியமானவர்களே, தேவனுக்கு கீழ்படியாமல் பிசாசானவனிற்கு எப்படி எதிர்த்து நிற்க முடியும்? ஆதியிலே ஆதாம் ஏவாள், பிசாசானவனுடைய சத்ததிற்கு செவி கொடுத்து கீழ்படிந்த தினால், தேவனுக்கு சத்துருவானார்கள். பரலோகத்திற்கு எதிரியானார் கள். இன்றும் தங்களை கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொள்கின்றவர்கள், இந்த உலகத்தோடுள்ள நட்பை மேன்மைபாராட்டுகின்றார்கள். சாலமோன் ராஜாவைப் போல, நாங்கள் ஞானிகள் என்று எண்ணி, சத்தியத்திற்கு விரோதமான நட்புகளை தங்களுக்கென ஏற்படுத்திக்கொள்கின்றார்கள். அதனால் பல பின்னடைவுகளை தங்கள் வாழ்விலே ஏற்படுத்திக் கொள்கின்றதை உணராதிருக்கின்றார்கள். நீங்களோ, சத்தியத்திற்குகீழ்படிந்திருங்கள். பிசாசானவனிற்கு எதிர்த்து நில்லுங்கள்.

**யாக்கோபு 4:7**

**ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.**

**ஜெபம்:** என்னை அழைத்த தேவனே, நான் என்னை ஞானி என்று எண்ணி, இந்த உலகத்திலே நட்புகளை ஏற்படுத்தி, சத்;தியத்தைவிட்டு விலகிப் போய்விடாதபடிக்கு நீர் என்னை உம் வழியிலே நடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# “விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்”

தேவனாலே தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்கள், அந்நாட்களிலே, மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம்பண்ணப்பட்டார்கள். வனாந்திரத் திலே, எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள். எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள் அந்தக் கன்மலை கிறிஸ்துவே. அதாவது, அவர்கள் தேவனுடைய வியக்கத்தக அற்புத அதிசங்யங்களை கண்ணார கண்டார்கள். அவருடைய சத்திய வார்த்தைகளை கேட்டார்கள். அப்படியிருந்தும், அவர்களில் அதிகமானபேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை. ஏன்? அவர்களில் சிலர் அல்ல அநேகர் காதாரக் கேட்டும் உணராமலும், கண்ணாரக்கண்டும் அறியாமலும் இருந்தார்கள். தேவனுயடைய அழைப்பின் மேன்மையை உணராமல், தங்களுக்கு உண்டான கிருபையை போக்கடித்தார்கள். ஆதலால் வனாந்தரத்திலே அவர்கள் அழிக்கப்பட்டார்கள். மிகுதியாக நிலைத்திருந்தவர்கள், மற்றவர்கள் அழிந்து போனதைக் குறித்து மேன்மை பாராட்டினார்களா? இல்லை, அவர்களுக்காக பரிதபிக்கும் உள்ளம் உடையவர்களாக இருந்தார்கள். இன்றைய நாட்களிலும், ஆரம்பத்திலே நன்றாக ஓடினவர்கள் பாதி வழியிலே நின்று தூங்குகின்றவர்களை போலனார்கள். சிலர், வழி விலகிப் போய்விடுகின்றார்கள். நாம் இந்த உலகத்தின் போக்கிற்கும், அதின் அழுத்தங்களுக்கும் மருளாமல், விசுவாசத்திலே நிலை நிற்கின்றோம் என்று கருதினால், தேவ கிருபைக்காக அவருக்கு நன்றி செலுத்த வேண்டும். உபத்திரவங்களிலே நாம் சோரந்து போகக்கூடாது. “இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன். மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார் உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.” “நீங்கள் மருளாதிருக்கிறது தேவனை எதிர்த்து நிற்கின்றவர்கள் கெட்டுப்போகிறதற்கும், நீங்கள் இரட்சிக்கப் படுகிறதற்கும் அத்தாட்சியாயிருக்கிறது. இதுவும் தேவனுடைய செயலே.”

**1 கொரிந்தியர் 10:12**

**இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்.**

**ஜெபம்:** அன்பின் தேவனே, நான் நிற்பதும் நிர்மூலமாகாதிருப்பதும் உம்முடைய சுத்த கிருபை என்று அறிந்து உணர்ந்து, மற்றவர்களுக்காக பரிந்து பேசுகின்றவனாக இருக்க எனக்கு உணர்வுள்ள இருயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உபத்திரவங்களில் மேன்மைபாராட்டுதல்

இந்த உலகத்திலே தேவ பக்தியாய் நடப்பதையும், அதே உலகத்தினால் உண்டாகும் உபத்திரவத்தையும் பிரித்து விட முடியாது. அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள என்று *2* தீமோத்தேயு *3:12*ல் வாசிக்கின்றோம். இன்று செழிப்பின் உபதேசங்களை பின்பற்றுகின்றவர்கள், பொருளாசையினால் உண்டாயிருக்கின்ற மயக்கத்தினாலே, சத்தியத்திற்கு விரோதமாக பிரசங்கித்து வருகின்றார்கள். இந்த உலகம் உங்களை பகைத்தால், ஆச்சரிய ப்படாதிருங்கள். அதன் மறுபக்கம் என்ன? இந்த உலகம் உங்களை ஏற்றுக்கொண்டால் நீங்கள் அதைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இந்த உலகத்தின் போக்கும், பரலோக வாசிகளின் போக்கும் ஒருபோதும் ஒத்திருக்க முடியாது. “உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும் நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது. ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள் அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள்.” என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். உங்கள் வாழ்க்கையிலே நீங்கள் நன்மை செய்து பாடநுபவித்தும், இன்னும் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலே நிலைத்திருந்தால், தேவனுக்கு நன்றி செலுத்துங்கள். ஏனெனில் பாடுகள் மத்தியிலே கிறிஸ்தவனாக வாழ்வது மனித பெலத்தினால் சாத்தியமாகாது. உங்களுக்குள் வாழும் தேவ ஆவியானவர்தாமே உங்கள் பக்கமாக நின்று உங்களை பெலப்படுத்ததுகின்றார். எனவே, கிறிஸ்துவினிமித்தம் உங்களுக்கு பாடுபடும்படி அருளப்பட்டிருப்பதால், தேவனுக்கு நன்றியை செலுத்துங்கள். பரலோகத்திலே உங்கள் பலன் மிகுதியாய் இருக்கும். எனவே, கிறிஸ்தவனாக இருப்பதினால் உண்டாகும் உபத்திரவங்களிலே தேவ கிருபையை மேன்மைபாராட்டுங்கள்.

**பிலிப்பியர் 1:29**

**ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர்நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது.**

**ஜெபம்**: நித்திய வாழ்விற்கு என்னை அழைத்த தேவனே, இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல், நாளுக்கு நாள் உள்ளான மனதின் மறுரூபமாக்கப்படும்படி எனக்கு உணர்வுள்ள இருயத்தை தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன்

# ஆதிமுதல் மாறாத தந்திரங்கள்

புதிதாக திருமணமாகிய இளம் தம்பதிகள், தங்கள் எதிர்கால வாழ்விற்கென்று இள வயதிலிருந்து கொஞ்ச பணத்தை சேர்த்து வைத்திருந்தார்கள். அவர்கள் திட்டமிட்டு, திருமணத்திற்கு முன்னரே, தங்களுக்கென்று ஒரு வீட்டை வங்கி கடன் மூலமாக கொள்வனவு செய்திருந்தார்கள். அவர்களுடைய திருமண கொண்டாட்டங்கள் யாவும் சிறப்பாக இருந்தது. இப்படியாக ஆரம்ப நாட்கள், யாரும் பார்த்து மெச்சத்தக்கதாக இனிதே நிறைவேறிற்று. அவர்கள் தாங்கள் தங்கள் பெற்றோரைவிட, ஒரு படி மேலாக வாழ்க்கையை ஆரம்பித்திருக்கின்றோம் என்று எண்ணியிருந்தார்கள்.

**2 கொரிந்தியர் 2:11**

அவனுடையதந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே.

அத்தோடு, இது நவீன யுகம், காலங்கள் மாறிவிட்டது, பெற்றோரின் ஆலோசனைகள் அந்தக் காலத்திற்குரியது என்ற மனநிலையுடையவர்களாக இருந்தார்கள். வீடு, வாகனம், வேலை, திருமண கொட்டடங்கள் யாவும் பெற்றோருடைய நாட்களைவிட சிறப்பாக இருந்தது உண்மை. ஏனெனில் பெற்றோர் அவர்கள் முன்னேற்றத்திற்குரிய வழியை ஆயத்தப்படுத்தியிருந்தார்கள். ஆனால், அது வாழ்க்கையல்ல அது வாழ்க்கைக்கு உதவும் ஒரு சிறிய பகுதிய என்பதை உணராதிருந்தார்கள். ஆண்டுகள் கடந்து சென்ற போது, வாழ்க்கைப்படகிலே அலைகள் மோத ஆரம்பித்தது. தென்றல் போல ஆரம்பித்த காற்று, அவ்வப்போது திசை தெரியாது மோதும் புயல் காற்றுபோல பயங்கரமாக இருந்தது. அவர்களுடைய வாழ்க்கையின் கொள்கை கோட்பாடுகள், அவர்கள் போட்டுக்கொண்டு ஒழுங்கு முறைகள் ஒவ்வொன்றும் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டது. பல ஆண்டுகள் கடந்து சென்ற பின்னரே, யுகம் மாறிவிட்டது, நவீன தொழில்நுட்பங்கள் வளர்ந்து பெருகி இருக்கின்றது. ஆனால், வாழ்க்கையில் உண்டாகும் போராட்டங்களின் கருப்பொருள் மாறிப்போகவில்லை. புதிய யுகமும், தொழில்நுட்பங்களும், பிரச்சனைகளை பெரிதாக்கி காண்பிக்கின்தேயல்லாமல் அவைகளால் அதை தீர்த்து வைக்க முடிவில்லை என்பதையும் கண்டு கொண்டார்கள். பிரியமானவர்களே, வேதமே சத்தியம். அதுவே வாழ்க்கையின் அடித்தளம். சத்துருவின் தந்திரங்கள் புதிதானவைகள் அல்ல. உலக போக்கும், அதன் யுகங்களும் அவனுக்குடபட்டிருக்கின்றது. *(1 யோவான் 5:19, ரோமர் 12:1-2)* ஆதியிலிருந்து அவன் திருடவும் கொல்லவுமேயன்றி வேறொன்றிற்கும் வரான். எனவே, வாழ்வின் போராட்டங்களை கிறஸ்துவுக்குள் ஜெயங் கொண்ட மேகம் போன்ற திரளான சாட்சிகளை பார்த்து கற்றுக் கொள்ளுங்கள்.

**ஜெபம்**: பரலோக தேவனே, அநேகமாயிரம் பொன் வெள்ளியைப்பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம் என்று உம்முடைய வார்த்தைகளை என் இருதயத்திலே காத்துக் கொள்ள எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஆலோசனைகளை தள்ளிவிடாதிருங்கள்

பிறப்பிலிருந்து தங்கள் பிள்ளையின் சுபாவங்களை அறிந்திருந்த பெற்றோர், அந்த பிள்ளை வளர்ந்து வரும் போது, பாடசாலையில் அவனுக்கு வரக்கூடிய சவால்களை நன்கு அறிந்திருந்தார்கள். அவன் அவைகளிலே மூழ்கிப் போய்விடக்கூடாது என்பதற்காக, அவனுக்கு நல்ல ஆலோசனைகளை வழங்கி, அவனை நல் வழியிலே நடத்த பல முயற்சிகளை செய்து வந்தார்கள். அவனோ, வாலிப நாட்களின் ஆரம்பத்திலேயே, "உங்களுக்கு ஒன்றும் தெரியாது" என்று கூறி தன் வயதுக்கொத்தவர்களின் மதியீனமான வழிகளிலே நடக்க ஆரம்பித்தான். இந்த நிலைமையானது பெற்றோருக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. எவ்வளவு நல்ல ஆலோசனைகளை கூறினாலும், பெற்றோரின் அன்பைவிட வேறே நிகரற்ற அன்பு இந்த உலகத்தின் பார்வையிலே இல்லையென்று அறியாமல், அந்த பிள்ளையானவன் உணர்வற்றவனாக வாழ்ந்து வந்தான். ஆண்டவராகிய இயேசு தாமே இந்த உலக்திலே தன் திருப்பணியை நிறைவேற்றும் நாட்கள் சமீபித்திருக்கையில், தாம் அழைத்த ஜனங்களை பார்த்து: "கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும்வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன் உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று." என்று கூறினார். அன்று மட்டுமல்ல, இன்றும் அநேகருடைய வாழ்க்கை அப்படியாகத்தான் இருந்து வருகின்றது. ஒருவேளை மேலே குறிப்பிடப்பட்ட அந்த சம்பத்திலுள்ள பெற்றோர், தங்கள் பரம பிதாவாகிய தேவனின் ஆலோசனைகளை எவ்வளவாக ஏற்று நடந்திருந்தார்கள் என்பதை அவர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இன்று இந்த உலகிலே, வாழ்பவர்கள், முன்பு இருந்த சந்ததியைவிட, கீழ்படியாமையுள்ளவர்களாகவும், நன்றியறிதல் இல்லாதவர்களாவும் மாறிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலைமை முன்பும் இருந்து வந்தது. ஆனால், இந்த காலத்திலே அவை அதிகமாக பெருகி இருப்பது வெளியரங்கமாக இருக்கின்றது. தங்கள் சிறுமையில் தங்களை நினைத்த மனிதர்கள், சீக்கிரமாக தூக்கி எறிந்து விடுகின்றார்கள். அதாவது, நன்மை செய்தவர்களுக்கு எல்லாவற்றிறும் அடிமைகளாக இருக்க வேண்டும் என்பது பொருளல்ல. ஆனால், அற்ப காரியங்களுக்காக நல்ல ஆலோசனைகளை தள்ளிப் போடுகின்றார்கள். நீங்கள் தேவ ஆலோசனையில் நிலைத்திருங்கள்.

**சங்கீதம் 119:105**

**உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.**

**ஜெபம்:** பரலோகத்திலிருக்கின்ற என் பிதாவே, உம்முடைய ஆலோசனைகளின் வழியை நான் ஒருபோதும் விட்டு விலகாதபடிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சத்திய வேதமே வாழ்வின் அடித்தளம்

முற்காலங்களிலே ரயில் வண்டிகளில் தடம்புரண்டு போவதைக் குறித்து கேள்விப்படுவது மிகவும் அரிதானதொன்றாக இருந்து வந்தது. நவீன காலங்களிலே, ரயில் வண்டிகள் அதிகரித்துள்ளது, ரயில் வண்டிகள் போகும் வேகம் அதிகரித்துள்ளது. தண்டவாளங்களை அமைக்கும் காலங்கள் குறுகியதாக இருக்கின்றது. மனிதர்கள் மென்மேலும் தொழி ல்நுட்பங்களிலே தங்கி வாழ்வ தால், தொழில்நுட்ப கோளாறுகள் கரணமாகவும் ரயில் வண்டிகள் தட ம்புரண்டு, மற்ற ரயில் வண்டிக ளோடு மோதி பெரும் பாதிப்புக் களை ஏற்படுத்திக் கொள்கின்றது. ரயில்வண்டிகள்தடம்புரண்ட பின்பு, அதன் காரணத்தை ஆராய்ந்து அறிகின்றார்கள். சில வேளைகளி லே அது மனிதர்களுடைய தவறாகவோ அல்லது தொழில்நுட்ப கோளா ராகவே, அமைக்கப்பட்ட ரயில் அல்லது தண்டவாளத்தின் தரம் போன்ற வைளை ரயில் தடம்புரளுவதற்கு காணரமாக இருக்கலாம். எது எப்ப டியாகஇருந்தாலும்,ஒரு ரயில் வண்டியானது தடம்புரண்டுவிட்டது என்று எப்போது கூறிக் கொள்கின்றார்கள்? அந்த வண்டியானது, போக வேண் டிய தண்டவாளத்தைவிட்டு, அகன்று போகும் போது, அது தடம்பு ரண்டுவிட்டது என்று கூறிக் கொள்வார்கள். இவ்வண்ணமாகவே, இன்று விசுவாசிகளும் பற்பல காரணங்களால் விசுவாசத்தைவிட்டு தடம்புரண்டு போய்விடுகின்றார்கள். பொதுவாக, அதற்கு சபை, மேய்ப்பர், மூப்பர், மற்றய விசுவாசிகள் என்று மற்றவர்களையே குற்றம் சாட்டிக் கொள் வார்கள். அவர்கள் யாரைக் குற்றம் சாட்டினாலும், அவர்கள் விசுவாச த்தைவிட்டு விலகிவிட்டார்கள். தடம்புரண்டு விட்டார்கள். தாங்கள் செல்ல வேண்டிய தண்டவாளத்தைவிட்டு எப்போதோ அகன்று போய்வி ட்டார்கள். வெளியரங்கமான விளைவோ பின்பு வெளிப்பட்டது. ஒரு கிறி ஸ்தவன் அல்லது விசுவாசி என்று அழைப்பப்படுபவன், நிற்க வேண்டி தண்டவாளம் என்ன? கர்த்தருடைய வேதம். தேவனுடைய வார்த்தை கள். இவைகளைவிட்டு ஒரு விசுவாசி விலகிப்போகும் போது, அவன் ஓடவேண்டிய தண்டவாளத்தைவிட்டு அகன்று போகின்றான். அதன் பின் விளைவுகள், முதலில் மனதில் ஆரம்பித்து, வீட்டிலும், சபையிலும், வெளி ப்படும். தங்கள வேலையும், கல்வியும் நன்றாக இருக்கின்றது என்று எண்ணிக் கொள்வார்கள். ஆனால், முடிவிலே அவைளும் அவர்கள் எதி ர்பார்த்த நல்ல முடிவை கொடுக்க மாட்டாது. எனவே சத்திய வேதத் திலே நிலைத்திருங்கள்

**யோசுவா 1:7**

நீ போகும் இடமெல்லாம் புத் திமானாய் நடந்துகொள்ளும் படிக்கு, அதை விட்டு வலது இடதுபுறம் விலகாதிருப்பா யாக.

**ஜெபம்:** அன்பின் தேவனே, நான் உம்முடைய திருக்குமாரனாகிய இயேசுவிலும், அவர் வார்த்தை என்னிலும் நிலைத்திருக்கவும், நான் மிகுந்த கனிகளை கொடுக்கும்படிக்கு என்னை கரம்பிடித்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஆவிக்குரிய யுத்தம்!

ஒரு வாலிபனானவன், தன் வாழ்வில் தனக்கேற்பட்ட கஷ்டங்கள், துன் பங்கள், நெருகங்கள் மத்தியிலும், தன் தகப்பனானவரோடு இருந்து, அவருடைய பண்ணையிலே வேலை செய்து வந்தான். அவனுடைய தகப்பனானவர் செய்யும் எல்லாக் காரியங்களையும் அவனாலே புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால், தன் தகப்பனானவருக்குதான் உதவி செய்ய வேண்டும் என்ற மனநிலையுடையவ னாக பல ஆண்டுகள் பிரயாசம்பட் டான். அதன் நன்மைகளை பின்பட்ட காலங்களிலே அறிந்து கொண்டான். இப்போது பண்ணையானது அந்த ஊர ாரின் கண்கை கவர்ந்ததால், பலர் அங்கு வந்து, வேலை செய்யவும், பிர யாசப்படவும், நாங்களும் அந்த பண்ணையிலே வேலை செய்கின்றோம் என்றும், அது பெரிய பண்ணை என்று பெருமையோடு கூறிக் கொண்டார்கள். ஆனால், அவர்கள் அந்த பண்ணையை அமைப்பதைக் குறித்தோ, அதிலே உண்டாகும் உபத்தி ரவங்களையோ அறியாதிருந்தார்கள். ஆனால், வேறு மனிதர்களுடைய பிரயாசத்திலே மகிழ்கின்றவர்களாக காணப்பட்டார்கள். ஆனால், மறு படியும் இந்த பண்ணையானது நஷ்டமடைய ஆரம்பிக்கும் போது, அவர்கள் யாவரும் அங்கு நிலைநிற்பதில்லை. பிரியமானவர்களே, இந்த சம்பத்தை சிந்தித்துப் பாருங்கள். உங்கள் சொந்த குடும்பங்களை இதற்கு ஒப்பனையாக வைத்து தியானியுங்கள். சபை ஊழியங்களை மையமாக வைத்து தியானம் செய்யுங்கள். நெருக்கங்கள் கஷ்டங்களை கண்டு ஓடிப் போகின்றவர்களாக இருக்காமல், ஆண்டவர் இயேசுவின் நல்ல போர்ச்சேவகர்களைப் போல நிலைத்திருந்து, ஆவிக்குரிய யுத் தத்தை நடப்பிக்கின்றவர்களாக இருங்கள். ஒருவன் தன் சொந்த வீட்டைவிட்டு அதிசீக்கிரமாக விலகிப் போகின்றவளாக இருதால், இன் னுமொருவனின் வாடகைவீட்டை விட்டு அகன்று போவது அதிக நிச் சயமல்லவோ. ஆண்டவர் இயேசு சொன்ன வார்த்தைகளை தியானி யுங்கள்: “நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவை களின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெரு மழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டி ன்மேல் மோதியும், அது விழவில்லை. ஏனென்றால், அது கன்மலை யின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது.” எனவே, போராட்டங்கள் மத்தியிலே ஆவிக்குரிய யுத்தத்தை நடப்பியுங்கள்.

**மத்தேயு 7:25**

பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை;

**ஜெபம்:** அன்பின் தேவனே, நெருங்கங்கள் துன்பங்கள் மத்தியிலே நான் மாம்சத்திலே யுத்தம் செய்யாமல், உம்முடைய வார்த்தையிலே நிலைத் திருந்து வெற்றி கொள்ள எனக்கு ஞானமுள்ள இருயத்தை தந்தருள் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கிறஸ்துவின் சாயலில் வளருங்கள்

உங்கள் ஆதரித்து நன்மை செய்கின்றவர்களுக்கு நன்றியறிதலுள்ளவர்களாக இருங்கள். தானதர்மங்கள் செய்து நல்லது, ஆனால் உண்மையான தேவ அன்பிலே வளர்ந்து பெருக வேண்டும். சிலர் தங்கள் சுய இலாபத்திற்காக கிறிஸ்துவை பிரசங்கிக்கலாம், ஆனால் நாமோ, பிதாவாகிய தேவனுடைய அநாதி தீர்மானம் நம் வழியாக மனிதர்கள் மத்தியிலே நிறைவேற வேண்டும் என்ற எண்ணத்தோடு கிறிஸ்துவை பிரசங்கிக்க வேண்டும். நாம் சரீரத்திலே இருந்தாலும், இந்த உலகத்தைவிட்டு கடந்து சென்றாலும், பிதாவாகிய தேவனுடைய நாமம், நம் வழியாக மகிமைப் படும் பொருட்டு, கிறிஸ்துவுக்காக வாழ வேண்டும். கிறிஸ்த வாழ்விலே போராட்டங்கள். போராட்டங்களினாலேசோர்ந்து போகாதபடிக்கு, அவைகள் மத்தியிலும் கிறிஸ்துவின் சாட்சிகளாக நாம் வாழ வேண்டும். மற்றவர்கள் நம்மைப் போல கிறஸ்துவை உண்மைமனதோடு சேவிக்கும்படிக்கு, நாம் மற்றவர்களுக்கு முன்மாதிரகளாக இருக்க வேண்டும். கிறிஸ்துவோடு வாழ்பவர்களுக்கு மரணம் ஆதயம் என்ற உப தலைப்புக்களிலே, இந்த வருட ஆரம்பத்திலிருந்து, அப்போஸ்தலராகிய பவுல், சிறையிலிருந்து, பிலிப்பி சபையோருக்கு எழுதிய நிருபத்தின் முதலாம் அதிகாரத்தை தியானித்து வந்தோம். குறிப்பாக போராட்டங்களை கண்டு சோர்ந்து போய்விடாதிருங்கள். பரீட்சைக்கு நில்லாதவர்களைப் போல வாழாமல், ஆவிக்குரிய போராட்டங்களின் பின்ணணியை நன்கு அறிந்தவர்களாக. கிறிஸ்துவின் சர்வாயுதவர்கத்தை அணிந்தவர்களாக காணப்பட வேண்டும். எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்க வேண்டும் என்று எண்ணி சுய அனுதாபத்தோடு வாழாமல், மீட்பராகிய இயேசு கிறிஸ்துவை கண்முன் வைத்து நோக்கிப் பாருங்கள். அவருடைய பாதச்சுவடுகளை பின்பற்றி, இந்த உலகத்திலே போராட்டங்களை மேற்கொண்டு, வெற்றி சிறந்த அவருடைய உண்மையான சீஷர்களின் வாழ்க்கையின் போக்கை உற்று நோக்கி பாருங்கள். "மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்கு கிறவரும் முடிக் கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமி த்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" *(எபிரெரெயர் 12:1)*

**பிலிப்பியர் 1:30**

**நீங்கள் என்னிடத்திலே கண்டதும் எனக்கு உண்டென்று இப்பொழுது கேள்விப்படுகிறதுமான போராட்டமே உங்களுக்கும் உண்டு.**

**ஜெபம்:** இரட்சிப்பின் தேவனே, நான் எப்போதும் ஆவியிலே எளிமையுள்ளவனாக இருந்து, உம்முடைய அழியாத வார்த்தைகளிலே நிலைத்திருக்க எனக்கு உணர்வுள்ள இருயதத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.